இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2016–17

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 09.03.2017

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. சோளத்தட்டு, புல், கூந்தப்பணை உள்ளிட்ட பசுந்தீவனங்கள் வழங்கப்பட்டன. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் முடித்து மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின. யானைகள் நலவாழ்வு முகாமில் நிறைவு விழா முன்னேற்பாடுகள் கவனிக்கப்பட்டது.

